
# தந்தி

விசேஷ பதிப்பு

இல: 1130 | 1971 பெப்ரவரி 3 புதன்கிழமை | ★ ★ ★ | விலை சதம் 5


6/2/71.

# திட்டமிட்டபடி வீரர்கள் அம்புலியில் இறங்குவர்



லண்டன் "மாடல்" அழகியான ஹெலன் ஜோன்ஸ் (22) என்பவர் "ஸர் ஹென்ரி" என்ற புதிய ஸ்தாபனமொன்றின் திறப்பு விழாவின்போது இப்படிக் காட்சி அளித்தார்.

புதிய வர்த்தக ஸ்தாபனத்தின் வாசலருகே தமது மார்பை சிமெந்தில் அழுத்தி ஸ்தாபனத்தைத் திறந்து வைக்கிறார்.

## அப்பலோவில் ஏற்பட்ட கோளாறு நீக்கப்பட்டது

ஹூஸ்டன், பெப். 2

"அப்பலோ–14" விண்வெளிக் கப்பல் திட்டமிட்டபடி சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறது. எதிர்வரும் 5–ம் திகதி வீரர்கள் அம்புலியில் இறங்குவர்.

தாய்க் கப்பலையும், நிலா வாகனத்தையும் இணைப்பதில் ஏற்பட்டு இருந்த சிக்கல் தற்பொழுது சரி செய்யப்பட்டு விட்டதாக ஹூஸ்டனில் உள்ள விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

விண்வெளி வீரர்களில் ஒருவரான ரூஸா தாய்க் கப்பலை நிலா வாகனத்துடன் இணைப்பதற்கு ஐந்து தடவை முயன்று தோல்வி அடைந்தார். ஆறுவது தடவையே அவர் அதில் வெற்றி பெற முடிந்தது.

"அப்பலோ–14" விண்வெளிக் கப்பலில் கோளாறு ஏற்பட்ட போதிலும் அது தனது பயணத்தைத் திட்டமிட்டபடி பூர்த்தி செய்யும் என்று அப்பலோ பயண டைரக்டரான செஷ்டர் லீ பத்திரிகை நிருபர்கள் மாநாடு ஒன்றில் கூறியுள்ளார்.

தாய்க் கப்பலையும், நிலா வாகனத்தையும் இணைப்பதில் சிக்கல் ஏற்பட்டதால் "அப்பலோ–14" தனது பயணத்தை இடையில் நிறுத்திக் கொண்டு பூமி திரும்பலாம் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

அப்படியான ஒரு நிலைமை ஏற்பட்டால் அம்புலியை வலம் வந்த பின்னரே பூமி திரும்புவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

தற்பொழுது அப்பலோ பயணம் திட்டமிட்டபடி நிறைவேற்றப்படும் என்று ஹூஸ்டனில் உள்ள நிபுணர்கள் அறிவித்ததினால், இரு கப்பல்களையும் இணைப்பதில் சிக்கல் ஏற்படாது என்றே நம்பப்படுகிறது. (5)



என்னங்க, கறுப்புச் சந்தைக்காரருக்குக் கடுந்தண்டனை கொடுக்கப் போகிறதாமே அரசு!

அதுதான் செத்தல் மிளகாயை றாத்தல் பதினெட்டு ரூபாவிற்கு விற்கின்றார்கள்!

## இந்தியாவில் தினமும் நாற்பது கொலைகள்

புதுடில்லி, பெப். 2

கடந்த ஆண்டு இந்தியாவில் தினமும் சராசரி நாற்பது கொலைகள் வீதம் நடைபெற்றுள்ளன.

சென்ற வருடம் இந்தியா முழுவதும் நடைபெற்றுள்ள கொலைகளின் தொகை 14 ஆயிரத்து 732 ஆகும்.

உத்தர பிரதேசத்தில் தான் கொலைகள் அதிகம் நடந்துள்ளன. இங்கு நடைபெற்ற கொலைகளின் தொகை 3 ஆயிரத்து 147 ஆகும்.

தலைநகரான புதுடில்லியில் 94 கொலைகள் மாத்திரம்தான் நடைபெற்றுள்ளன.

இந்தியாவில் கலகங்களுக்கும், கலவரங்களுக்கும் கூட குறைவில்லை. 55 ஆயிரத்து 796 கலவரங்கள் சென்ற வருடம் இந்தியா எங்கும் நடைபெற்றுள்ளன.

தலைநகரான டில்லியில் கொலை, கொள்ளை, கடத்தல் சம்பவங்கள் அதிகம் இடம் பெற்றுள்ளன. சென்ற ஆண்டு செப்டம்பர் முதலாம் திகதி முதல் நவம்பர் 15-ம் திகதிவரை நாலாயிரத்து முப்பத்தைந்து வழக்குகள் பதிவாகி உள்ளன.

இவை அனைத்தும் இந்திய அரசாங்கம் வெளியிட்டுள்ள தகவல்களாகும். (12)

## பாகிஸ்தான் ஜனாதிபதியை கொலை செய்ய முயற்சி?

லாகூர், பெப். 2

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் யஹ்யாகானைக் கொலை செய்யச் சதி நடைபெற்றதா என்பது குறித்து பாகிஸ்தான் அரசு விசாரணை மேற்கொண்டுள்ளது.

சென்ற மாதம் 15-ம் திகதி கராச்சியில் உள்ள காயிதே ஆஜம் முஹம்மதலி ஜின்னாவின் கல்லறைக்கு ஜனாதிபதி யஹ்யாகான் விஜயம் செய்தார்.

அப்போது அங்கு சந்தேகத்துக்கிடமான முறையில் காணப்பட்ட ஒரு வாலிபனை பொலீஸார் கைது செய்தனர்.

அந்த வாலிபனை பரிசோதனை செய்தபோது அவனிடம் ஒரு கைத் துப்பாக்கி இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. அந்தக் கைத் துப்பாக்கியில் தோட்டாக்களும் இருந்தன.

அப்துல் காலிக் என்னும் 25 வயது நிரம்பிய அந்த வாலிபன் தற்போது காவலில் வைக்கப்பட்டு உள்ளான். ஜனாதிபதியைக் கொலை செய்யும் நோக்கத்தில் தான் அவன் அங்கு காணப்பட்டானா என்பது குறித்து தற்போது விசாரணை நடத்தப்படுகிறது. (12)

## அதிக விலையில் இறைச்சி விற்றவருக்குச் சிறைத் தண்டனை ஐஞ்நூறு ரூபா அபராதம்

திருகோணமலை, பெப். 2

கட்டுப்பாட்டு விலையிலும் கூடிய விலைக்கு மாட்டிறைச்சியை விற்பனை செய்த ஒருவருக்கு திருமலை நீதவான் திரு. சைமன் சில்வா அபராதமும் சிறைத் தண்டனையும் விதித்தார்.

இவ்வழக்கில் எதிரியான ராவுத்தர் செய்யது உமர் என்பவர், 1 ரூபா 90 சதத்திற்கு விற்கு வேண்டிய 2 றாத்தல் எலும்புடன் கூடிய மாட்டிறைச்சியை 2 ரூபா 30 சதத்திற்கு விற்பனை செய்ததாக பொலீஸ் இன்ஸ்பெக்டர் பேரின்பநாயகத்தால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

குற்றவாளி என்று ஒப்புக்கொண்ட எதிரிக்கு நீதவான் 500 ரூபா அபராதம் விதித்ததுடன் ஒரு மாதம் கடுங்காவல் சிறைத் தண்டனை அனுபவிக்கும்படியும் உத்தரவிட்டார்.

இது போன்ற குற்றங்கள் நிச்சயம் ஒழிக்கப்பட வேண்டும்" என்று நீதவான் தீர்ப்பு கூறுகையில் சொன்னார். (287)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம்மணதீவுக் கொலை, திட்டமிட்ட செயலாம்

# சந்தேக நபர் நால்வரை பொலீஸார் கைது

## இரத்தக் கறையை எடுக்க மண்வெட்டிப்பிடிக்குநகாஸ்

மன்னார், பெப். 2

முருங்கன் செம்மண்தீவுக் கொலை, திட்டம் இட்டுச் செய்யப்பட்ட ஒன்று என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

முருங்கன் செம்மண்தீவிலுள்ள மாவிலங்கேணி என்ற கிராமத்தில், பதின்மூன்று வயது மடுத்தீன் செபஸ்தியாம்பிள்ளை என்ற சிறுவன் அடித்துக் கொலை செய்யப்பட்டு, பாழ் கிணறு ஒன்றினுள் போடப்பட்டிருந்தான்.

இம்மரணத்தை யொட்டி நானாட்டான் கிழக்கு (முருங்கன்) சடுதி மரண விசாரணையாளர் திரு. ஜே. சி. கிருபைரத்தினம் விசாரணை நடாத்திப் பகிரங்கத் தீர்ப்பு வழங்கியதைத் தொடர்ந்து மன்னார் பொலீஸ் உதவி இன்ஸ்பெக்டர் திரு. டி. கே. ஜெயக்கொடி விசாரணையை மேற்கொண்டார். சந்தேக நபர்களாகப் பொலீசாரால் கைது செய்யப்பட்ட செல்லப்பா இராமச்சந்திரன், இருளப்பன் இருளாண்டி, நாராயணன் பால்சாமி, சிங்கராசா, துரைசாமி என்ற நால்வரும் விசாரணைக்குப் பின் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களைக் கைது செய்த பொலீஸார், கொலைக் கருவி எனக் கருதப்படும் ஒரு மண்வெட்டியையும் கைப்பற்றியுள்ளனர். மண்வெட்டியின் காம்புத் தடி கத்தியால் முழுவதும் செதுக்கப்பட்டு உருமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகக் கூறினர்.

பிரேத பரிசோதனை நடாத்திய முருங்கன் வைத்திய அதிகாரி டாக்டர் சி. சிங்கராஜா, சிறுவன் செபஸ்தியாம்பிள்ளை காயத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சியுடன் மூளை சிதறுண்டதால் மரணம் அடைந்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார். (185)

## அரசாங்க அநுமதி இல்லாது எவரும் நெல் வாங்க முடியாது

அரசாங்கத்தின் அங்கீகாரம் பெறுமல் விவசாயிகளிடம் இருந்து நெல்லை வாங்குபவர்களும், நெல்லை விற்பவர்களும் கடுந் தண்டனைக்கு உள்ளாக்கப் படுவர்.

இதற்கான சட்டம் ஒன்று மிக விரைவில் அமுல் நடத்தப்பட இருக்கிறது.

புதிய சட்டத்தின் படி விவசாயிகளிடம் இருந்து அரசாங்கம், அல்லது அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு இயக்கங்கள், பிரதிநிதிகளுக்கே முழு நெல்லையும் கொள் முதல் செய்ய உரிமை உண்டு

மேலும் அரசாங்கத்தால் நாடு பூராவும் நிறுவப்பட இருக்கும் விவசாயக் கமிட்டியில் அங்கத்துவம் பெறுத விவசாயிகள் தமது நெல்லை அங்கீகாரம் பெற்றவர்களுக்கு விற்க முடியாது.

புதிய சட்டத்தின்படி நெல்லை அதிகமாக வைத்து இருப்பவர்கள், விற்பவர்கள், ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்கு உத்தரவு இல்லாமல் எடுத்து செல்பவர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்படுவர். (11)

## விளையாட்டுக் கழகங்களின் மதுபான விற்பனை தடை

அனுமதிப் பத்திரம் இன்றி மதுபானம் விற்பனை செய்யும் விளையாட்டுக் கழகங்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் பொலீஸார் தீவிரமாக ஈடுபட்டு உள்ளனர்.

நகரப்புறத்திலும், கிராமப் புறத்திலும் உள்ள பல விளையாட்டுக் கழகங்கள் அனுமதிப் பத்திரம் பெறுது சட்ட விரோதமாக மதுபானம் விற்பனை செய்து வருவதாக கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது. இந்த விளையாட்டுக் கழகங்களில் கஞ்சா, அபின், கசிப்பு, சாராயம் மற்றும் மதுபான வகைகளும் விற்பனை செய்யப்படுகின்றனவாம்.

இப்படி சட்ட விரோதமாக விற்பனை செய்யும் விளையாட்டுக் கழகங்களில் திடீர் பரிசோதனை நடத்துவதில் பொலீஸார் தற்போது முனைந்துள்ளனர்.

பொலீஸாரால் இதுவரை நடத்தப்பட்ட திடீர் பரிசோதனைகளின் போது பல விளையாட்டுக் கழகங்கள் அகப்பட்டு உள்ளன. அகப்பட்ட விளையாட்டுக் கழகங்களில் உள்ள மதுபான வகைகள் யாவும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டு உள்ளதுடன், கழக நிர்வாகிகள் மீதும் குற்றமு' சாட்டப்பட்டு உள்ளது. (12)

## மரணதண்டனை ரத்தானது

மட்டக்களப்பு, பெப். 2

மட்டக்களப்பு கரும்புப் பண்ணைக் கூட்டுத்தாபனத்தில் இரவுக் காவலாளியாக கடமை யாற்றியவருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை அப்பீல் நீதிமன்றம் ரத்துச் செய்துள்ளது.

கதிராமன் கந்தக்குட்டி (42 வயது) என்பவர், கதிரன் வேலையாவை (வயது 30) கொலை செய்தார் என்ற குற்றத்துக்காக மட்டக்களப்பு அசைஸ் நீதிமன்றம் முன்னர் மரண தண்டனை விதித்திருந்தது. (11)

## தாம்பத்திய வாழ்வு ஆகப் பத்து மாதத்திற்குத்தானும்

"1969-ம் வருடம் ஜூன் பத்தாம் திகதி பிரதிவாதி என்னை திருமணம் செய்தார். இத்திருமணம் மூலம் எமக்கு குழந்தையொன்றும் பிறக்கவில்லை. அவர் என்னை தினமும் துன்புறுத்தி வந்தார். உடலாலும், உள்ளத்தாலும் அவர் என்னை துன்புறுத்தினர்.

"பிரதிவாதி ஒரு சூதாடியும் கூட. எனது நகைகளையும், அரிசி புத்தகத்தையும் அடைவு வைத்துச் சூதாடினர். எனது கணவர் இறுதியில், எல்லாவற்றையும் இழந்த பிறகு என்னைத் துரத்தி விட்டார். திருமணமாகி பத்து மாத காலம்தான் அவருடன் வாழ முடிந்தது".

புறக்கோட்டையைச் சேர்ந்த இ. ஏ. விமலாவதி என்ற பெண் அங்கொடையைச் சேர்ந்த திரு. எம். டி. பிரேமதாசா என்பவரிடம் ஜீவனாம்சம் கோரி கொழும்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், "வாதி" மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் பிரஸ்தாப வழக்கு கொழும்பு பிரதம நீதவான் திரு. டி. இ. தர்மசேகரா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்ட போது, தமது கணவர் இ. போ. ச. பஸ் சாரதியாக பணியாற்றுவதாகவும், ஒரு சதம் கூட தமது சீவியத்துக்கு செலவு செய்வதில்லை எனவும், ஆகவே அவரிடமிருந்து ஜீவனாம்சம் பெற்றுத் தரும்படி நீதிபதியைக் கேட்டுக் கொண்டார்.

பிரதிவாதி திரு. பிரேமதாஸாவை மார்ச் மாதம் 16-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும் படி நீதவான் கட்டளை பிறப்பித்தார்.

விமலாவதியும் அத்தினம் நீதிமன்றத்துக்கு வருமாறு கோரப்பட்டுள்ளார். (129–ச)

## கல்லோயாவில் கசிப்பு வடிப்பு

கல்லோயா குடியேற்றப் பகுதிகளில் கசிப்பு வடிப்பதும், விற்பனை செய்வதும் மிகவும் மும்முரமாக நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

இந்தப் பகுதிகளில் உள்ள பெண்களும் கசிப்புத் தொழிலில் பெரிதும் ஈடுபாடு காட்டி வருகிறர்களாம். ஒரு குடிசைக் கைத் தொழில் போன்றே இத்தொழில் நடைபெற்று வருகிறதாம். (12)

## நூறு ரூபா அபராதம்

திருகோணமலை, பெப். 2

89 ருத்தல் மாட்டிறைச்சியை சட்ட விரோதமாக வைத்து இருந்த குற்றத்தை ஒப்புக் கொண்ட கே. எம். இப்ராஹிம்ஸா என்பவர் மீது திருகோணமலை நீதவான் திரு. சைமன் சில்வா 100 ரூபா அபராதம் விதித்தார். (287)

## வேறு தொழில் இல்லையா?

திருகோணமலை, பெப். 2

கசிப்பு வைத்திருந்த குற்றத்தை ஒப்புக் கொண்ட ரேச் வாஸ், நகுலேஸ்வரி ஆகியோருக்கு முறையே 250 ரூபா, 75 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்த திருமலை நீதவான் திரு. சைமன் சில்வா, வேறு நல்ல தொழிலை நாடும்படி எதிரிகளுக்குப் புத்திமதி கூறினர். (287)

## ரஷ்யாவில் அதிக எண்ணெய் உற்பத்தி

மாஸ்கோ, பெப். 2

இந்த ஆண்டில் சோவியத் ரஷ்யா 38000லட்சம் தொன் எண்ணெய் உற்பத்தி செய்யும் என எண்ணெய்த் தொழில் அமைச்சர் திரு. வலன்டீன் ஷாஷின் கூறியுள்ளார்.

இது கடந்த ஆண்டிலும் பார்க்க 250 லட்சம் தொன்கள் கூடுதலாகும்.

மேற்கு ஸைபீரியாவில் பாரிய எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது, இங்கு 400 லட்சம் தொன்கள் எண்ணெய் அகழ்ந்தெடுக்கப்படும். (12)

## கறுப்புச்சந்தைப் பேர்வழிகளுக்கு கடுந்தண்டனை

உடவளவை, பெப். 2

"மக்களுக்குத் தேவையான பொருட்களைப் பதுக்கி கறுப்புச் சந்தையில் லாபம் சம்பாதிக்கும் வியாபாரிகள் அனைவரும் வெகு விரைவில் கடுந் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள்."

இவ்வாறு கொலன்ன எம். பி. திரு. பீ. ஜ. விமலநாக இங்கு பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார். (11)


### நீங்காக் கடமை!

உயர் விஞ்ஞானக்கலை வர்த்தகக்கலை தொழில் நுட்பக்கலை முதலிய யாவற்றுக்கும் ஆங்கில மொழி அத்தியாவசியம். இதனை உணர்ந்தே 1951-ல் ஆங்கிலம் இரண்டாவது பாடமாகப் பயிற்றப்படுதல் வேண்டும் என்ற சட்டம் இயற்றப்பட்டது. எனினும் அச் சட்டம் இன்று நடைமுறையில் இயங்குவதாகத் தெரியவில்லை. இந்த நிலையைமாற்றி எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் ஆங்கிலம் பயிற்றப் பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியர்களை அளிக்க வேண்டியது கல்வி அமைச்சின் நீங்காக் கடமையாகும்.

தந்தி



### தந்தி

சிறு ... பரங்கள்

### வைத்தியம்

எவ்வளவு நாள்பட்ட வியாதியானாலும் சரி, பிற வைத்தியங்கள் செய்து குணப்படாமல் கை விடப் ... னாலும் சரி, ஊசி ஏற்றி ...ல் இருந்தாலும் சரி, ...ரகசிய நோய் க... தாமதம் செய்யாமல் நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வர முடியாது போனால் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளுங்கள். ஆலோசனை இலவசம். முருகானந்தா வைத்திய சாலை, 104 செட்டியார் தெரு, கொழும்பு-11.

மதன சஞ்சீவி லேகியம். [ஆண்களுக்கு மட்டும்] பாலிய சேஷ்டையினலோ அல்லது அதிக சம்போகத்தினலோ, வீரியம். ஆண்மை குறைந்தவர்களுக்கும், (SEXUAL DEBILITY) சக்தியை ...ழந்தவர்களுக்கும் இழந்து போ... சக்தியை மீட்டு, புதிய சக்திக்கும், தேக வளர்ச்சிக்கும், குடும்ப வாழ்க்கைக்கும் சிறந்த லேகியம். நீரிழிவு பிளட் பிரசர் உள்ளவர்களும் பாவிக்கலாம், ஒரே புட்டியில் குணம் காணலாம். மதன சஞ்சீவி ஒரு ருத்தல் ரூ. 23/–, ½ ருத்தல் ரூ. 12/–, வி. பி. பி. ஆடர் கவனிக்கப்படும். முருகானந்தா வைத்திய சாலை, 104, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாபரிப்பு வழக்கில் வாலிபனுடன் மனைவி ஓடியதாகப் புகார்

# மனைவியை அல்லாது பிறரை நான் தொட்டறியேன்!

## ஐந்துபிள்ளைக்கும்தாய்க்கும் ஜீவனும்சம் செலுத்த உத்தரவு

"எங்கள் வீட்டில் வாடகைக்கு அறை எடுத்து தங்கி இருந்தான் பத்மசிறி என்னும் வாலிபன். ஒரு தடவை எனது மனைவி அவனுடன் ஓடிப் போனாள். இச்சம்பவத்தை எங்கள் வீட்டருகில் உள்ள யாவரும் அறிவார்கள். அவர்கள் என்னைக் கேலி செய்தார்கள்"

தாபரிப்பு வழக்கொன்றில் இப்படிக் கூறினார் ஐந்து பிள்ளைகளின் தந்தை ஒருவர்.

இந்த வழக்கில் எதிர்மனுதாரர் கிரிலப்பனையில் உள்ள எம். பி. ஈ. கரோலிஸ் என்பவராவார். தம்மையும், தமது பிள்ளைகள் ஐவரையும் காரணமின்றிக் கைவிட்டுச் சென்று விட்டதாக மனுதாரப் பெண் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

மனுதாரரான தயாவதி தமது ஐந்து பிள்ளைகளுடன் நீதிமன்றத்துக்கு வந்திருந்தார். எதிர்மனுதாரரான கரோலிஸ் கறுப்பு நிறத்தில் சாரமும், சேர்ட்டும் அணிந்து நீதிமன்றத்தில் காணப்பட்டார்.

"என்ன சொல்கிறீர், இந்த பிள்ளைகள் உம்முடையதுதான் என்பதை ஒப்புக் கொள்கிறீரா? தாபரிப்புப் பணம் செலுத்த விருப்பம் தானே?" வழக்கு விசாரணைக்கு முன்னர் நீதிபதி எதிர்மனுதாரரிடம் கேட்டார்.

"சார் எதிர்மனுதாரர் தாபரிப்புப் பணம் செலுத்த விருப்பம் இல்லை. அவர் பழைய பிழைகளை மறந்து விட்டு மனைவியையும், பிள்ளைகளையும் மீண்டும் பொறுப்பேற்க விருப்பமாக உள்ளார்" எதிர்மனுதாரர் சார்பில் ஆஜராகியிருந்த வழக்கறிஞர் குயின்டின் பெரேரா கூறினார்.

"யாருடைய தவறை மறப்பது? எதிர்மனுதாரர் இந்தக் குடும்பத்துக்கு செய்த தவறையா? முடியாது, முடியாது.

நாம் இந்த எதிர்மனுதாரர் வாயால் மாத்திரம் கூறும் சமாதானங்களுக்கு எவ்வாறேனும் உடன்பட முடியாது. நாங்கள் வழக்கு விசாரணைக்கு தயாராக உள்ளோம்" மனுதாரரின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. தாபரே பதில் அளித்தார்.

"நல்லது. மனுதாரர் சமாதானத்துக்கு விருப்பம் இல்லாதபடியால் நாங்கள்வழக்கை விசாரணை செய்வோம்" எனக் கூறிய நீதிபதி மனுதாரரை சாட்சியமளிக்கு அழைத்தார்.

மனுதாரர் தயாவதி சாட்சிக் கூண்டில் ஏறிப் பின்வருமாறு கூறினார்: "நான் எதிர்மனுதாரர் கரோலிஸை மணமுடித்து 15 வருடங்கள் வரை ஒன்றாகக் குடும்பம் நடத்தியுள்ளேன். இந்த விவாகத்தின் காரணமாக எனக்கு நான்கு பெண் பிள்ளைகளும், ஒரு ஆண் பிள்ளையும் இருக்கின்றனர். கணவர் புகையிரத திணைக்களத்தில் ஊழியம் புரிகிறார்.

"அவருடன் சமாதானமாக குடும்பம் நடத்த முடியாது. எந்நேரமும் என்னை அடிக்கிறார். நான் இது சம்பந்தமாக கல்கிசை பொலீஸிலும் பல முறை புகார் செய்துள்ளேன். வீட்டுச் செலவுகளுக்கும் அவர் பணம் கொடுப்பதில்லை. எனது சகோதரர், தாயார் ஆகியோரின் உதவிகளினால்தான் நான் பிள்ளைகளை பராமரிக்கிறேன்".

எதிர்மனுதாரரின் வழக்கறிஞர்:- "உமக்கு பத்மசிறி என்னும் வாலிபர் பற்றி தெரியுமா?"

மனுதாரர்:- "தெரியும். அவர் எங்கள் வீட்டில் சிறிது காலம் தங்கி இருந்தார்".

எதிர்மனுதாரரின் வழக்கறிஞர்:- "நீர் பத்மசிறியுடன் ஏதேனும் தொடர்புகள் வைத்திருந்தீரா?"

மனுதாரர்:- "ஐயோ இல்லை. அவ்வாறான தொடர்புகள் எங்கும் நான் வைக்கவில்லை.

எதிர்மனுதாரரின் வழக்கறிஞர்:- "நீர் அவருடன் ஓடிப் போன போது இந்த எதிர்மனுதாரரான கணவர் கல்கிஸ்ஸை பொலீஸில் புகார் செய்தாரல்லவா?"

சாட்சி:- "அவர் அவ்வாறு புகார் செய்ய பொலீஸுக்கு சென்ற போது நானும் அங்கு போனேன். அங்கே உள்ள பொலீஸ்காரர் ஒருவர் பொய்ப் புகார் செய்ய வர வேண்டாம் எனக் கூறி அவரை (கணவரை) விரட்டினார்.

தொடர்ந்து சாட்சியமளித்த மனுதாரர்:- எதிர்மனுதாரருக்கு தினமும் பீடி குடிப்பதற்கு முப்பது சதம் வீதம் தான் கொடுக்க வேண்டும் எனவும், அப்படிக் கொடுக்கா விட்டால் தன்னை அடிப்பதுடன் சட்டிபானைகளையும் உடைப்பதாகவும், இதனால் தானும், பிள்ளைகளும் பசியோடு இருக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டதாகவும் கூறினார்.

தாம் எவருடனும் தவறான தொடர்புகள் வைத்திருக்கவில்லை எனக் கூறிய மனுதாரர், எதிர்மனுதாரரின் தொல்லைகள் காரணமாகத்தான் அவருடன் குடும்பம் நடத்த தயாராக இல்லை எனவும் கூறினார்.

மனுதாரரின் சாட்சியத்தின் பின், எதிர்மனுதாரர் கரோலிஸ் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"நான் புகையிரதத் திணைக்களத்தில் ஊழியம் புரிகின்றேன். மனைவியுடனும், பிள்ளைகளுடனும் புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான வீடொன்றில் வசித்து வந்தேன். 1967-ம் ஆண்டில் பத்ம சிறி என்னும் வாலிபர் எங்கள் வீட்டில் வாடகைக்கு அறை எடுத்துத் தங்கி இருந்தார்.

"1967 செப்டம்பர் 9-ம் திகதி நான் வேலை முடிந்து வீடு திரும்பிய போது பத்மசிறியும், மனைவியும் வீட்டில் இருக்கவில்லை. நான் மனைவியைத் தேடிப் பார்த்தேன். ரத்மலானையில் உள்ள கோனு கோவில் பக்கத்தில் மனைவியும், பத்மசிறியும் வீடு தேடி சென்றதாகப் பலர் மூலம் கேள்விப் பட்டேன். பின்னர் எனது மனைவி ஓடிப் போய் விட்டதாகக் கல்கிஸ்ஸைப் பொலீஸில் முறைப்பாடு செய்வதற்காகச் செப்டம்பர் 11-ம் திகதி சென்றேன்.

"நான் அங்கு முறைப்பாடு செய்து கொண்டிருக்கையில் மனைவியும் அங்கு வந்தாள். பின்னர் எங்களிடையே சமாதானம் ஏற்பட்டது. பின்னர் எனது மூத்த மகளை வேறொரு இளைஞனுடன் பயணம் ஒன்றை மேற்கொள்ள அனுமதித்தது குறித்து எனக்கும், மனைவிக்கும் பிணக்கு ஏற்பட்டது. இந்த பிணக்கின் காரணமாக தகராறு முற்றியதால் வீட்டிலிருந்து நான் வெளியேறினேன். ரத்மலானையில் உள்ள அறையொன்றை வாடகைக்கு எடுத்து பதினொரு மாதங்கள் தங்கி இருந்தேன்."

தொடர்ந்தும் சாட்சியம் அளித்த கரோலிஸ், தாம் இன்னும் வாடகை அறையில் தங்கி, ஹோட்டலில் சாப்பிட்டு வருவதாகவும், மனைவியை விட்டுப் பிரிந்த பின் அவருக்கோ, பிள்ளைகளுக்கோ பணம் கொடுக்கவில்லை என்றும் கூறினார்.

மனுதாரரின் வழக்கறிஞர்:- "நீர் லீலாவதி என்னும் பெண்ணை அறிவீரா?"

சாட்சி:- "பெண்கள் பலரை அறிவேன், ஆனால் பெயர் தான் தெரியாது" (சிரிப்பு)

மனுதாரரின் வழக்கறிஞர்:- "நல்லது; நீர் விமலாவதி என்னும் பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்தீர் அல்லவா?,

எதிர்மனுதாரர்:- "ஐயோ இல்லை. நான் எந்தக் கோயிலிலும் சத்தியம் செய்வேன். அப்படித் தொடர்பு ஏதும் நான் வைக்கவில்லை.

நீதிபதி:- "வேறு பெண்கள் மீது கை வைத்ததும் இல்லையா?" (கோர்ட்டில் சிரிப்பு)

எதிர்மனுதாரர்:- "ஐயோ இல்லை. 15 வருடமும் மனுதாரர் ஆன எனது மனைவியை மட்டும் நான் தொட்டுள்ளேன். (மீண்டும் சிரிப்பு).

தொடர்ந்தும் சாட்சியமளித்த எதிர்மனுதாரர், பத்மசிறிக்கும், தனது மனைவிக்கும் உள்ள தொடர்பு குறித்து தாம் வசித்த இடத்தில் உள்ளவர்கள் கேலி செய்வதாகவும், இலங்கையின் எந்த இடத்திலும் வீடு தேடி மனைவியையும் அழைத்துச் சென்று வாழ்வதாகவும், தாம் முன்பு வசித்த வீட்டுக்குச் செல்ல விருப்பம் இல்லை என்றும் கூறினார்.

சாட்சியங்கள் முடிந்த பின், மனுதாருக்கும் பிள்ளைகளுக்கும் தாபரிப்புப் பணமாக மாதம் 125 ரூபாய் வழங்குமாறு எதிர்மனுதாரரைப் பணித்து தீர்ப்பு கூறினார் நீதிபதி (12)

## மரத்தில் இலை பறித்த தகராறில் கத்திக்குத்தும் கொலையும்

கொழும்பு, பெப். 3

"சந்தேக நபர் எனது கணவரின் முன்னால் வந்து ஒரேயடியாக அவரது நெற்றியில் கத்தியால் குத்தினார்."

கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்ட தனது கணவரின் மரண விசாரணையின் போது சாட்சியமளித்த இறந்தவரின் மனைவி டொன் விஜய இவ்வாறு கூறினார்.

கொலை செய்யப்பட்டவர் களுபோவிலை பன்சல வீதியைச் சேர்ந்த ஆர். பெரேரா என்பவராவார். 56 வயது நிரம்பிய இவருக்கு மூன்று பிள்ளைகள் உளர்.

திடீர் மரண விசாரணை அதிகாரியான திரு. எகடன் பீ. விரக்கோன், பொரளையில் உள்ள திடீர் மரண விசாரணை மண்டபத்தில் வைத்து இந்த மரண விசாரணையை நடத்தினார்.

சந்தேக நபா இருப்பது எங்கள் வீட்டுக்கு அடுத்துள்ள இடத்தில் தான். அவருக்கும் எங்கள் வீட்டவர்களுக்கும் இடையில் நல்ல உறவுகள் இருக்கவில்லை. எங்கள் இடத்தையும், சந்தேக நபரின் இடத்தையும் பிரிக்கும் நடவடிக்கை சம்பந்தமாக தகராறு இருந்தது.

சம்பவம் நடைபெற்ற தினம் மாலையில் எனது கணவர் மரத்திலிருந்து இலைகள் பறித்துப் போட்டார். அப்போது சந்தேக நபர் இலைகள் பறிப்பது ஏன் என்று கேட்டார். "நான் வளர்த்த மரத்தில் இருந்து இலை பறிக்க என்னால் முடியாதா" என எனது கணவர் திருப்பிக் கேட்டார்.

இந்தச் சம்பவத்திற்கு சற்று நேரம் கழித்து எனது கணவர் வீட்டருகில் இருக்கும் போது சந்தேக நபர் பைசிக்கிளில் வந்து இறங்கி எனது கணவருக்கு அருகில் வந்தார். எதுவித பேச்சு வார்த்தையும் அப்போது இடம் பெறவில்லை. ஒரேயடியாக கத்தி ஒன்றை எடுத்து கணவரைக் குத்தினார்.

இந்த மரணம் கொலைச் சம்பவம் என திடீர் மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார். (12)

## ஏழு பேர் கைதாகினர்

மன்னார், பெப். 2

இவ் வருடத்தின் முதலாவது கள்ளக் குடியேற்றக்காரரர் எனக் கருதப்படும் ஏழு நபர்களை பேசாலை கிராம சேவகர் திரு. எஸ். எஸ். பீரிஸ் கைது செய்து உள்ளார்.

மன்னார் பொலீஸில் ஒப்படைக்கப்பட்டுள்ள இவர்களையொட்டிய பொலீஸ் விசாரணை நடைபெற்று வருகின்றது.

(185)

## இருதாரக் குற்றத்திற்கு ஒன்பது வருடச் சிறைவாழ்வு

பலதாரத் திருமணம் செய்த குற்றத்துக்காக நிரந்தர வசிப்பிடமற்ற மருதானையைச் சேர்ந்த டிக்கிரி பண்டா செனவிரத்தின என்பவருக்கு ஒன்பது வருட கடுங்காவல் தண்டனை நேற்று முன்தினம் கொழும்பு பிரதம மஜிஸ்திரேட் திரு. ஆர். ஈ. தர்மசேகராவால் வழங்கப்பட்டது.

சட்டப்படி முதலாவது திருமணம் செய்து வாழ்ந்த பின், விவாகரத்துப் பெறுமல் மறுமணம் செய்தது, மறுமணம் செய்து கொண்ட பெண்ணுக்கு முதல் திருமணம் பற்றி தெரிவிக்காதது, திருமணப் பதிவுகாரருக்கு பொய்த் தகவல்கள் அளித்தது ஆகிய இந்த மூன்று குற்றங்கள் அவர் மீது சுமத்தப்பட்டன.

இது பற்றிக் கூறப்படுவதாவது:—

எஸ். எம். டிக்கிரி பண்டா செனிவரத்தின, ஆரியதாசா டயஸ் ஆகிய இரு பெயர்களில் வாழ்ந்த பிரஸ்தாப நபர் 1967-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 22-ம் திகதி சட்டப்படி திருமணம் செய்து கொண்டார்.

கொன்ஸி ஹேபலதா ரூபசிங்கா என்பவரை 1967-ம் ஆண்டில் இவர் திருமணம் செய்யும் முன்னர் ஏற்கனவே கல்கிசையைச் சேர்ந்த குணவதி வீரக்கோன் என்பவரைத் திருமணம் செய்து இருந்தார்.

தமது முதலாவது திருமணம் பற்றி பிரஸ்தாப நபர் இரண்டாவது மனைவியிடம் ஏதும் தெரிவிக்கவில்லை. அத்துடன் திருமணப் பதிவுகாரருக்கும் பொய்த் தகவல்கள் கொடுத்து இரண்டாவது திருமணம் செய்து கொண்டார்.

(11)

## கடந்த ஆண்டில் 886 கொலைகள்

கடந்த வருடம் விபத்து மரணங்களைவிட கொலைச் சம்பவங்களே அதிகமாக ஏற்பட்டுள்ளன என்று பொலீஸ் இலாகா அறிவித்துள்ளது.

அண்மையில் வெளியான பொலீஸ் புள்ளிவிபர மதிப்பீடுப்படி 1970-ம் வருடம் மொத்தம் 886 கொலை நிகழ்ச்சிகளும், 627 மொத்த விபத்து மரணங்களும் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(129-ச)

## பொலீஸார் செய்திகள்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் செய்தி அறிக்கைக்குப் பின் "பொலீஸ் செய்திச் சுருள்" ஒன்றை ஒலிபரப்பும்.

இந்த செய்திச் சுருளில், பொலீஸ் இலாகா சம்பந்தப்பட்ட பொது மக்கள் நலன்கள் ஒலிபரப்பாகும் (11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபாசப் புத்தகங்கள் கண்டுபிடிப்பு!

## வெளிநாட்டு கப்பல் ஒன்றில் பெருந்தொகையாக இருந்தது

நிர்வாண அழகிகளின் விதம் விதமான படங்களைக் கொண்ட பெருந்தொகையான ஆபாசப் புத்தகங்களை சுங்கப் பகுதியினர் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்டுள்ள புத்தகங்களில் உள்ள நிர்வாணப் படங்கள் மிகவும் ஆபாசமாக உள்ளன. இத்தகைய ஆபாசப் படங்கள் இது காலவரைக்கும் இலங்கைக்குக் கொண்டு வரப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

போலந்து நாட்டிலிருந்து வந்துள்ளதாகக் கூறப்படும் கப்பல் ஒன்றிலிருந்து இந்த ஆபாசப் படங்களை ஊழியர் ஒருவர் கொண்டு வந்துள்ளார். சுங்கப் பகுதி அதிகாரி ஒருவரின் சூட்சும பரிசோதனையின் மூலம் அந்த ஊழியரிடமிருந்து ஆபாசப் படங்கள் கைப்பற்றப்பட்டன. அதனைத் தொடர்ந்து கப்பலில் இருந்து மேலும் ஆபாசப் புத்தகங்கள் சுங்கத் திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கப்பலிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆபாச புத்தகங்கள் "சீல்" வைக்கப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக நடைபெற்ற விசாரணையின்போது, இத்தகைய ஆபாசப் புத்தகங்களில் இருபது மருதானையிலுள்ள ஓரிடத்தில் விற்பனை செய்யப்பட்டதாக அறியக் கிடைத்துள்ளது. விற்பனை செய்யப்பட்ட அந்தப் புத்தகங்கள் சம்பந்தமாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்தப் புத்தகங்களில் ஒன்று 7-50க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. ரூபா 7-50க்கு வாங்கப்பட்ட அந்தப் புத்தகம் முப்பத்தைந்து, நாற்பது ரூபா வரை விலை கூறி விற்கப்பட்டுள்ளதாகவும் அறியக் கிடைத்துள்ளது.

தற்போது இந்த ஆபாசப் புத்தகங்களின் பிரதிகள் வேறு இடங்களுக்கும் பரவியுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சுங்க அதிகாரிகள் அந்த இடங்களிலும் பரிசோதனைகள் நடத்தவும் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கு முன்னெப்போதும் இத்தகைய மோசமான படங்கள் உள்ள புத்தகங்கள் இலங்கைக்குள் கொண்டு வரப்படவில்லை என சுங்கப்பகுதி அதிகாரிகள் கூறுகின்றனர்.

கப்பலில் இருந்து வந்த ஊழியரிடம் பத்து புத்தகங்கள் இருந்ததாகவும், அவற்றையும் மற்றைய புத்தகங்களையும் தாம் கைப்பற்றி உள்ளதாகவும் சுங்கப்பகுதி அறிவித்து உள்ளது. (ண-12)

දෙමළ කථා කරන ලංකාවාසී

රැකියාවක් නොමැති තරුණ තරුණියනි

ස්ථිර මාසික වැටුප් ක්‍රමයක් යටතේ

අප සංවිධානයේ දීප ව්‍යාප්ත සත්ව පාලන ව්‍යාපාරයේ සත්ව පාලකයින් වශයෙන් සේවයට ඇතුලත්වී මාස්පතා රුපියල් 250/-බැගින් ස්ථිර වැටුපක් ලබා ගන්න. මේ සඳහා වයස අවු 16-40 අතර සිංහල කියවීමට හා ලිවීමට දත් සත්වපාලනයට ලැදි දෙපක්ෂයෙන්ම 10,000 ක් බඳවා ගැනීමට අයදුම්පත් කැඳවනු ලැබේ.

තෝරා ගන්නා අයදුම් කරුවන් අප සංවිධානයේ ස්ථිර මාසික වැටුප් ලබන සත්ව පාලකයින් වශයෙන් සේවයේ යොදවන අතර - ඒ සඳහා අවශ්‍ය සතුන් - සත්ව ආහාර - බෙහෙත් - උපකරන ආදිය සංවිධානයෙන්ම සපයනු ලැබේ.

සත්ව පාලකයින්ට

ස්ථිර වැටුප් රු. 250/- දක්වා

මාස්පතා ගෙවනු ලැබේ.

මේ සම්බන්ධ සියලු විස්තර සිංහලෙන් පමනක් විමසන්න.

නොමිලේ!

100 ක් කුකුල් පැටවුන් 100 ක්

අප සංවිධානයේ දීප ව්‍යාප්ත සත්ව පාලන ව්‍යාපාරය මගින් සංවිධානය කර ඇති නොමිලේ කුකුල් පැටවුන් 100 බැගින් බෙදා දීමේ වැඩ පිළිවෙල දැන් දෙමළ කතා කරන ලංකාවාසී ඔබටද ක්‍රියාත්මක කිරීමට අප විසින් කටයුතු යොදා ඇත. මේ වැඩ පිළිවෙල අනුව අප සංවිධාන මගින් ලංකාවාසී සැමටම නොමිලේ කුකුල් පැටවුන් 100 ක් බැගින් ලබා දෙන අතර, ඒ සඳහා අවශ්‍ය කෑම - බෙහෙත් - උපකරණ - ආදිය ද අප සංවිධානයෙන් ලබා ගැනීමට පුළුවන. එපමණක් ද නොව - ඔබේ සත්ව නිෂ්පාදන වෙළඳ පොලේ ඉහළම මිලට අලෙවි කර දීමටද අප විසින් පොරොන්දු වෙනවා ඇත.

අප සංවිධානයේ දීප ව්‍යාප්ත සත්ව පාලන ව්‍යාපාරයේ නොමිලේ කුකුල් පැටවුන් බෙදාදීමේ වැඩ පිළිවෙල ආරම්භකල අවස්ථාවේ ගරු කෘෂිකර්ම හා ඉඩම් උප ඇමති එච්. ඇම්. නවරත්න මැතිතුමා අතින් පලමු කුකුල් පැටවුන් 100 ය. වලස්මුල්ලේ වී. ඩබ්. පියදාස මහතාට පිරිනැමූ අවස්ථාවේදී ගත් ඡායාරූපයක්.



මේ සම්බන්ධ සියලු විස්තර ඔබේ ප්‍රදේශයේ

සත්ව පාලන ඕවර්සියර් තුමා

ගෙන් හෝ ප්‍රධාන කාර්යාල යෙන් සිංහලෙන් පමණක් විමසන්න.

**Animal Husbandry and Industrial Organization,**

*2 1/2, Bristol Street,*

**Colombo-1.**

## மின்சார அடுப்பு பலி எடுத்தது

அட்டன், பெப். 2

மின்சார அடுப்பில் ஏற்பட்ட கோளாறு 20 வயது இளைஞனை பலியெடுத்த கோரச் சம்பவம் டிக்கோயாவில் நடந்துள்ளது.

முகமது அலி என்றழைக்கப்படும் பிரஸ்தாப இளைஞன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படும் வழியில் மரணமானார்.

டிக்கோயா திடீர் மரண விசாரணை அதிகாரி இது சம்பந்தமாக மரண விசாரணை நடத்தினார். (96)

## பெண்ணுக்கு நஷ்டஈடு

அட்டன், பெப். 2

தேயிலைக் கொழுந்து பறித்துக் கொண்டிருக்கையில் உருண்டு விழுந்து தோள்பட்டையை முறித்துக் கொண்ட பெண்ணுக்கு 1666 ரூபா நஷ்ட ஈடு வழங்கும்படி நட்ட ஈட்டுக் கமிஷனர் தீர்ப்பளித்தார்.

டிக்கோயாவில் உள்ள தோட்டம் ஒன்றைச் சேர்ந்த இந்தப் பெண்ணின் சார்பில், ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் அட்டன் மாவட்ட பிரதிநிதி விசாரணையின் போது ஆஜராகி இருந்தார். (96)

## மினி உடை வேண்டாம்

மினி உடை அணிவதால், இந்நாட்டின் சமூகங்களின் கலாசாரங்கள் பாழடைந்து வருகின்றன. இந்த மினி உடையை தீயிட வேண்டும். பெண்களின் அச்சம், நாணம் முதலியவற்றை மறக்கச் செய்யும் இந்த மினி உடையை "ஈழத்துப் பெண்கள் பகிஷ்கரிக்க வேண்டும்."

அண்மையில் கலகொட என்னுமிடத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பதில் கல்வி அமைச்சர் திரு. பி. வை. துடாவை மேற்கண்டவாறு கூறினர். (129-ச)

இப்பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5. குணசேன மாவத்தை, கொழும்பு -12 (இலங்கை). வெளியிட்ட திகதி 2 பெப்ரவரி 1971-
"THANTHI", 5, Gunasena Mawatha, Colombo 12, Ceylon

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org